**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 29-09-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-29 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-30 | 2023-10-01 | 2023-10-02 | 2023-10-03 | 2023-10-04 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 3.0 | 3.0 | 2.0 | 12.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 33.0 | 33.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 24.0 | 24.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 16 | 18 | 16 | 14 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 230 | 230 | 230 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 7 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 70-80% ஆகவும், பகல் நேரங்களில் 40% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33.0-34.0°C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24.0-25.0°C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 14-18 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

05.10.2023 முதல் 11.10.2023 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பாகவும் காணப்படும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வாரங்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது, எனவே விவசாயிகள் பயிர்களுக்கு மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | முதிர்ச்சி அடைந்த நிலக்கடலை பயிர்களை அறுவடை செய்து கிடங்குகளில் சேமித்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. |
| நெல் | மழைக்காலம் நூற்புழு தாக்குதலுக்கு உகந்தது என்பதால், நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம். |
| நெல் | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைப்பேன் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம் பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம்மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும், நடவு வயலிலும் காணப்படும். இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த 20 செண்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்ஷும் 8.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 400 மிலி (10000 பி.பி.எம்) அல்லது தயாமீதாக்ஷும் 40 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| மக்காச்சோளம் | 1. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் படைப்புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது, அதை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம். 2. சியன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தயாமீதாக்ஷும் 19.8 FS @ 4.0 மிலி/கிலோஎன்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்திசெய்துவிதைக்கலாம். 3. இஞ்சி அல்லது தட்டைப்பயிறு அல்லது உளுந்து பயிர்களை வரப்பு ஓரங்களில் நடவு செய்யலாம். 4. எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கலாம். 5. குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC @ 0.4 மிலி/லி (அல்லது) ஃபுளுபெண்டிமைடு 20 WG (0.5 கிராம்/லி) என்ற அளவில் பயிர் செய்த 15-20 நாட்களில் தெளிக்க வேண்டும். 6. எமாமெட்டின் பென்சோயேட் 5 SG (0.4 g/l) அல்லது ஸ்பைனிடோராம் 11.7 SC (0.5 மிலி/லி) 35-40 வது நாள் மற்றும் 60 வது நாள் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | இலேசான மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |